### என்.எல்.சி. விவகாரம்:

# அமைதிக்கு குந்தகம் விளைவித்தால் கடும் நடவடிக்கை!

## அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை!



மதுரை, ஜூலை 29–

வன்முறை போர்வையை போர்த்திக் கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் எவராக இருந்தாலும் அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் என அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

என்.எல்.சி. விவகாரம் தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளரிடம் கூறியதாவது:–

என்.எல்.சி. சுரங்க விரிவாக்க பணி இந்த பரவனாற்று மாற்று பாதை மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

இதை செய்தால் தான் அந்த சுரங்கத்திற்கு உண்டான மற்ற பணிகள் செய்ய முடியும். சுரங்கப் பணிகளுக்கான அனைத்து பணிகளும் மேற்கொண்டால்தான் மின்சாரம் உற்பத்தி பாதிக்காமல் இருக்கும். மின்சார உற்பத்தி பாதிக்காமல் இருந்தால் தான் நமக்கு உரிய மின்சாரம் வழங்கப்பட கூடிய சூழல் நிலை வரும்.

**இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது!**

பரவனாற்று மாற்று பாதை அமைக்கும் பொழுது அங்கே ஏற்கனவே பயிர் நடவு செய்திருப்பவர்களுக்கு பயிர் இழப்பீட்டு தொகையாக ஒரு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் அளவிற்கு என்.எல்.சி. இடம் இருந்து இழப்பீட்டுத் தொகை பெறுவோம் என்று உறுதி அளித்திருந்தோம். இதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு ரூ.23 லட்சம் வரை வழங்கப்பட்ட தொகை தற்போது ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

என்.எல்.சி. நிறுவனத்துக்கான இந்த நில எடுப்பு பணிகளில் உள்ளூரில் இருக்கக்கூடிய விவசாயிகள், என்.எல்.சி. அதிகாரிகள், மாவட்ட நிர்வாகம், பல் வேறு அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி பல் வேறு காலகட்டங்களில் பல் வேறு நிலைகளில் பேச்சுவார்த்தை நடத்தி இழப்பீடு தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் இன்றைக்கு என்.எல்.சி.யில் சில அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துவதாக அறிவித்து போராட்டம் அறவழியில் நடைபெறுவதைத் தாண்டி அந்த போராட்டம் வன்முறை கலவரமாக வெடித்திருப்பது என்பது மிகவும் கண்டனத்திற்குரியது.

இந்த வன்முறை போராட்டம் காரணமாக அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் நில உரிமையாளர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையை அமைதியாக அணுகினாலும் சில இடங்களில் வெளி ஊர்களில் இருந்து வெளிநபர்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டு தூண்டுதலின் பேரில் வந்தவர்களால் வன்முறை ஏற்பட்டு இருக்கிறது. இந்த வன்முறை என்பது மிக மிக கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இந்த வன்முறையால் 20–க்கும் மேற்பட்டோர்கள் காயமடைந்து இருக்கிறார்கள்.

**பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தால் கடும் நடவடிக்கை!**

ஒரு பிரச்சினையை சுமுகமாகப் பேசினால் தான் தீர்வு காண முடியும். ஏற்கனவே பல்வேறு கட்ட காலங்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இருக்கிறது.

அதை விடுத்து வன்முறை குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக விவசாயிகளை கேடயமாக வைத்துக்கொண்டு இத்தகைய வன்முறை நடவடிக்கையில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

வன்முறை தமிழ்நாட்டின் எந்த மூலையிலும் நடந்தாலும் தமிழக அரசு அனுமதிக்காது.

வன்முறை போர்வையை போர்த்திக் கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய யாராக இருந்தாலும் எவராக இருந்தாலும் அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும்.

அறவழியில் போராட்டம் நடத்துவதாக கூறியதால் தமிழக அரசு அனுமதி வழங்கியது.

ஜனநாயக ரீதியாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதாக தெரிவித்ததால், அவர்களது உணர்வுகளை மதிப்பளித்து தமிழக அரசு அனுமதி வழங்கியது. ஆனால் இதை மீறி நிறுவனத்தின் பணிகளை பாதிக்கும் வகையில் வேண்டுமென்றே வன்முறைக்கான களத்தை உருவாக்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சட்டம் ஒழுங்கை சிறப்பாக பாதுகாத்து செயல்படுத்த வேண்டியது அரசின் கடமை.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 160 மற்றும் 161வது வார்டு பகுதிகளில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பதிவு செய்யும் சிறப்பு முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# க.முத்தம்மாள் நினைவு கோப்பை தேசிய அளவிலான ஒற்றையர் கேரம் போட்டி!

## திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைக்கிறார்!

திருப்பூர்,ஜூலை.29-

திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு க.முத்தம்மாள் நினைவு கோப்பை தேசிய அளவிலான மாபெரும் ஆண்களுக்கான ஒற்றையர் கேரம் போட்டியை (தம்பிங்) திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைக்கிறார்.

திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், தமிழ்நாடு கேரம் சங்க சீனியர் துணை தலைவர், திருப்பூர் மாவட்ட செயலாளர் அம்மன் ஃபேஷன் எஸ்.சிவக்குமார் ஏற்பாட்டில் தெய்வத்திரு க.முத்தம்மாள் நினைவு கோப்பை தேசிய அளவிலான மாபெரும் ஆண்களுக்கான ஒற்றையர் கேரம் போட்டி (தம்பிங்) 29.07.2023 30.07.2023 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று திருப்பூர்லட்சுமி நகர் குலாலர் திருமண மண்டபத்தில் பி.எஸ்.ஜி. கலை (ம) அறிவியல் கல்லூரி முன்னாள் சேர்மன் செ.திலகராஜ் தலைமையில் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் செ.சண்முகவிக்னேஷ், திருப்பூர் தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார் வரவேற்புரையில் நடைபெற உள்ளது. இப்போட்டியை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக திருப்பூர் மாவட்ட கேரம் சங்க சேர்மன் ஸ்வி டெக்ஸ் ஜியோ செல்வராஜ் வழங்கும் ரூ 30,000 மும், இரண்டாம் பரிசாக மாமன்ற உறுப்பினர் வெ.இராதா கிருஷ்ணன் வழங்கும் ரூ 15,000 மும், மூன்றாம் பரிசாக திருப்பூர் தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார் வழங்கும் ரூ 10,000 மும், நான்காம் பரிசாக மாணவரணி ஏ.டி.சண்முகம் வழங்கும் ரூ 5,000 மற்றும் கால் இறுதியில் நுழையும் அணியினருக்கு திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், அறங்காவலர் குழு உறுப்பினர் ப.கலைச் செல்வி வழங்கும் சுழற் கோப்பையை வழங்குகிறார்.

இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார், மண்டலத்தலைவர்கள் சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி, சேலம் மத்திய மாவட்ட பொதுக்குழு உறுப்பினர், தமிழ்நாடு கேரம் சங்க மாநிலத் தலைவர் எம்.நாசர்கான் (எ) அமான், நல்லூர் பகுதி கழக செயலாளர் மேங்கோ அ.பழனிசாமி, கொங்கு நகர் பகுதி கழக செயலாளர் போலார் ஆர்.சம்பத்குமார், வட்ட கழக செயலாளர் அ.நித்தியானந்தம், திருப்பூர் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கன்னியப்பன் கலந்து கொள்கின்றனர். இறுதிப் போட்டியை திருப்பூர் தெற்கு மாநகர கழக துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார் துவக்கி வைக்கிறார், அரை இறுதிப் போட்டியை மாநகரப் பொருளாளர், மாமன்ற உறுப்பினர் செந்தூர் முத்து (எ) ஜி.முத்துகிருஷ்ணன் துவக்கி வைக்கிறார், கால் இறுதி போட்டியை மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி துவக்கி வைக்கிறார். தலைமை கழக பேச்சாளர்கள் ரஜினி ந.செந்தில், கோ.மனோகர்பாபு ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றனர்.

இதில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொள்கின்றனர். இறுதியில் வே.திராவிட பாலு, தெ.விஜயசிம்மராஜா நன்றி கூறுகின்றனர்.

### கோட்சேவின் வாரிசுகள் என்று பா.ஜ.க. அறிவிக்குமா?

# வீழட்டும் கருணையிலா பாசிச பா.ஜ.க. ஆட்சி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜூலை 29-*

*திராவிடத்துக்கும் கோட்சேவின் வாரிசுகளுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டம் 2024 மக்களவைத் தேர்தல். பா.ஜ.க. என்னும் கருணையிலா பாசிச ஆட்சியை வீழ்த்திட, பிரச்சாரங்கள் பலவகைகளிலும் சுழன்றடிக்கட்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:*

*“ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்! கோட்சேவின் வாரிசுகள்தான் நீங்கள்!!”*

*“நான் இன்னும் சொல்கிறேன், இது வாரிசுகளுக்கான கட்சிதான்.”*

*“ஆமாம், வாரிசுகளுக்கான கட்சிதான். ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்! தந்தை பெரியாரின் வாரிசுகள்! பேரறிஞர் அண்ணாவின் வாரிசுகள்! தமிழினத் தலைவர் கலைஞரின் வாரிசுகள் நாங்கள்! இதனைத் தைரியமாக பெருமையோடு என்னால் சொல்ல முடியும்.”*

*“பா.ஜ.க. யாருடைய வாரிசு? நான் கேட்கிறேன். கோட்சேவின் வாரிசுகள் தான் நீங்கள் என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியுமா? சொல்வதற்கான தைரியம் உங்களுக்கு உண்டா?”*

*திராவிடர் இயக்கத்தின் தீரர் கோட்டையாம் திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் 26.7.2023 அன்று முழங்கியிருக்கிறார் நமது ஆற்றல்மிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!*

*‘திராவிட மாடல்’ ஆட்சி அவரது சீரிய செயலாற்றல் மூலம் திக்கெட்டும் போற்றும் அதன் சாதனைகள்மூலம் திறன்மிகு ஆட்சியாக மக்களுக்குப் பயன்படுகிறது!*

*அறிஞர் அண்ணா பிறந்த நாளாம் செப்டம்பர் 15 ஆம் தேதிமுதல், கலைஞர் நூற்றாண்டையொட்டி குடும்பத் தலைவி மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்ற புதியதோர் திட்டம் தொடங்கப்படவும், அதனால் ஒரு கோடி தாய்மார்கள் பயன்பெற்று மகிழப் போகிறார்கள்!*

**அய்.என்.டி.அய்.ஏ கூட்டணி ‘திராவிட மாடல்’ அடிப்படையில்!**

*சொன்னதைச் செய்யும் அரசு மட்டுமல்ல, இந்த அரசு கூடுதலாக சொல்லாததையும் செய்யும் அரசு தி.மு.க. அரசு அது ‘திராவிட ஆட்சி’யின் மாட்சி! இத்தகு சாதனைகளை வெகுமக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்திடுவது திராவிடர் இயக்கங்களான தி.க., தி.மு.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள், இயக்கங்களின் கடமை மட்டுமல்ல; கொள்கைக் கூட்டணியாக இந்தியாவிற்கே இதோ இந்த இந்தியா கூட்டணி பதவிக் கூட்டணி அல்ல; கொள்கை லட்சியக் கூட்டணியாக கடந்த 18 ஆண்டுகளாக எதிர்க்கட்சி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியாகத் தொடரும் அத்துணை கட்சிகளின் முக்கிய கடமையும் ஆகும்!*



*‘INDIA’ (Indian National Developmental Inclusive Alliance) ‘இந்தியா’ என்ற ஒரு புதிய பெயர் பெற்ற 26 கட்சிகளின் கூட்டணியாக அது பெருவளர்ச்சி பெற்று ‘திராவிட மாடல்’ அடித்தளத்திலேயே பயணிக்கத் தொடங்கியுள்ளது நமக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்துள்ளது!*

**தி.மு.க. தோழர்கள் செய்ய வேண்டியது என்ன?**

*மற்றொரு முக்கியமான கருத்தினை தி.மு.க. வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் அன்புக்கட்டளையாக அவர்களுக்குக் கூறியுள்ளார் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் நமது முதலமைச்சர் அவர்கள்!*

*“இப்படி கோடிக்கணக்கானோர் இலட்சக்கணக்கானோர் பயன்பெறும் திட்டங்களை நிறைவேற்றி, இன்றைக்கு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் அரசுதான் நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு. இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் செல்லும் பரப்புரையாளர்களாக நீங்கள் செயல்பட வேண்டும்.*

*நமக்கு எதிராக அவதூறுகளையும், பொய்ச்செய்திகளையும் பரப்பிட ஒரு கூட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறது. பொய்களுக்கு ஆயுள் மிகக் குறைவு. அவர்கள் பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கட்டும். நாம் திரும்பத் திரும்ப நம் அரசின் திட்டங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கும் நலத் திட்டங்கள் குறித்து வாக்காளர்களிடம் விளக்கிச் சொல்லுங்கள். இதன் மூலமாக எதிரிகள் பரப்பும் அவதூறுகள் எல்லாம் சுக்குநூறாக நொறுங்கிப் போய்விடும்” என்று பேசியிருக்கிறார் முதலமைச்சர்.*

*இதனை இடையறாது செய்யவேண்டிய இன்றியமையாத கடமை ஒவ்வொரு தோழருக்கும், தொண்டருக்கும் உண்டு!*

*பிரச்சாரம் அடைமழையாகப் பெய்து பருவம் பாராது பிரச்சாரச் சூறாவளி சுழன்றடித்தால், கொள்கை எதிரிகள் கூண்டோடு காணாமற்போய்விடுவர்!*

**வீழட்டும் கருணையிலா பாசிச பா.ஜ.க. ஆட்சி!**

*2024 தேர்தலை முன்கூட்டியே நடத்திட மோடியின் ஆர்.எஸ்.எஸ். அரசு திட்டமிடக்கூடும்; என்றாலும், எப்போதும் தயார் நிலையில் நமது செயல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கவேண்டும்.*

*1. மேடைப் பிரச்சாரம்*

*2. தெருமுனைப் பிரச்சாரம்*

*3. திண்ணைப் பிரச்சாரம்*

*4. சமூகவலைதளப் பதிலடி பிரச்சாரம்*

*5. கலைத்துறை மூலமும் பிரச்சாரம்*

*இப்படி பலப் பல பிரச்சாரங்களைத் தொய்வின்றித் தொடருவீர்!*

*தேர்தலில் வீழட்டும் கருணையிலா பாசிச பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சி!*

*வெற்றி மக்களுக்கே! ஜனநாயகத்திற்கே!!*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### மலர்விழி தமிழ் அமுதன் தலைமை! திலகவதி ரவிச்சந்திரன் - சாந்தி சதீஷ்குமார் வரவேற்புரை!

# திருப்பெரும்புதூர் தொகுதி தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## புதுக்கோட்டை விஜயா - சரஸ்வதி மனோகரன் கண்டன உரை!

*காஞ்சிபுரம், ஜூலை 29-*

*மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின பெண்களுக்கு நடந்த பாலியல் வன்முறையை கண்டுகொள்ளாத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து - திருப்பெரும்புதூர் தொகுதி தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (29.7.2023- சனிக்கிழமை) காலை 9 மணியளவில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.*

*கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மலர்விழி தமிழ் அமுதன் தலைமை வகிக்கிறார்.*

*திலகவதி ரவிச்சந்திரன், சாந்தி சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*ஆர்.கே.அபிபுன்னிசா, வி. தாட்சாயிணி, ரா.சரளா, செளதரா, விமலா, ஆர்.சுசீலா ராதா கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைக்கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, குன்றத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.*

*இந்த ஆர்ப்பாட்டத்தில் வாசுகி ரமேஷ், சங்கீதா வேலு, மகாலட்சுமி எட்டியப்பன், ஷோபா ரகுநாதன், மல்லிகா நடராஜன், லட்சாவதி கருணாகரன், மலர்விழி முருகன், குமுதா சுமன், ராஜலட்சுமி ராஜி, உமா சத்தியமூர்த்தி, ஷீலா தனசேகரன், சுமதி வைத்தீஸ்வரன், கோதை நாயகி வரதன், மீனா மோகன், சாவித்திரி சந்திரன், ஆரிக்கம் ஜெயபால், ஸ்ரீவித்யா ரஞ்சித்குமார், வசந்தி சாம்பசிவம், வள்ளி சுந்தர்.*

*க.சுபரஞ்சினி, கோ.கல்பனா, சீ.மாலினி, க.கல்யாணி, சி.ராதா, லே.ரீட்டா, கு.நாகராஜ், கோமதி கணேஷ்பாபு, மல்லிகா ரவிச்சந்திரன், கோவிந்தம்மாள் தாஸ், சாந்தி சீனிவாசன், கல்பனா யுவராஜ், செஞ்சிராணி, சசிரேகா, சரவணன், குமுதா டோம்னிக், சந்திரா மாசிலாமணி, முத்தம்மாள் சங்கர், வீரம்மாள் ராமு, நளினி சின்ன கண்ணு, கே.மேகலா, ஆர். காமாட்சி, டி.மஞ்சுளா, எஸ். மனோன்மணி, ஏ.கலாவதி, கே.கீதா, எம்.கலைச்செல்வி, உஷா கோதண்டம், ஹேமாவதி விமல் உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.*

*மாலதி போஸ்கோ நன்றி கூறுகிறார்.*



திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், எஸ்.வி.ஜி.புரம் ஊராட்சி கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாமை மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.க.தீபா, ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதாஆபாவாணன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஆர்.கே.பேட்டை வட்டாட்சியர் விஜயகுமார், தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### கல்லூரி மாணவர்களிடையே தமிழர் மரபு - பெருமிதத்தை உணர்த்தும் வகையில்

# “மாபெரும் தமிழ்க் கனவு” இரண்டாம் கட்ட நிகழ்வுகள் ஆரம்பம்!

## சென்னை பெண்கள் கிறித்துவக் கல்லூரியில் கரு.பழனியப்பன் கருத்துரை!

*சென்னை, ஜூலை 29-*

*கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் மரபையும் தமிழ்ப் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் ‘மாபெரும் தமிழ்க் கனவு’ என்ற பெயரிலான பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வுகள் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 03.02.2023 அன்று தொடங்கப்பட்டு 24.04.2023 வரை, தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,000 கல்லூரிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 1 லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் 100 இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன. உயர்கல்வித்துறையுடன் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தியது.*

*இதன் 100வது நிகழ்ச்சி சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 24.04.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் இந்நிகழ்வானது கல்லூரி மாணவர்களிடையே சமூக விழிப்புணர்வு, சமத்துவ வளர்ச்சி குறித்த புரிதலை ஏற்படுத்தும் வகையிலும், அவர்கள் அடுத்த கட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் வகையிலும் அமைந்திருக்கிறது. எனவே கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் இந்நிகழ்ச்சி அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்தப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 200 கல்லூரிகளில் ‘மாபெரும்தமிழ்க் கனவு’ பரப்புரைத் திட்டம் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டு வருகின்றன. குறைந்தபட்சம் 1.5 லட்சம் மாணவர்களைச் சென்றடைவதே திட்டத்தின் இலக்காகும். பல்வேறு தளங்களில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் 50க்கும் மேற்பட்ட ஆளுமைகளைக் கொண்டு, 200 சொற்பொழிவுகளை நடத்திமுடிக்க செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. உயர்க்கல்வி - வேலைவாய்ப்புக்கு இரு கையேடுகள்!*

*மாணவர்களுக்கு உதவும் வகையில் புத்தகக்காட்சி, ‘நான்முதல்வன்’, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாவட்டத் தொழில் மையம், தாட்கோ, வங்கிக் கடனுதவி ஆலோசனை மையம், மகளிர்சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் போன்ற அரங்குகள் நிகழ்வு நடைபெறும் கல்லூரிகளில் அமைக்கப்படுகின்றன.*

*இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ‘உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி’, ’தமிழ்ப் பெருமிதம்’ ஆகிய இரு கையேடுகள் வழங்கப்படுகின்றன.*



சென்னை மகளிர் கிறித்தவக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில், திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் கலந்துகொண்டு, ”மங்கையராய்ப் பிறப்பதற்கே என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

*இந்தப் பரப்புரையின் தொடர்ச்சியாக சென்னை, பெண்கள் கிறித்தவக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே...’ என்னும் பொருண்மையில்திரைப்பட இயக்குநரான கரு.பழனியப்பன் கருத்துகளை எடுத்துரைத்தார். தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் ரெ. கோமகன் திட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். பெண்கள் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த் துறை பேராசிரியர் எஸ்தர் அருள் மேரி நன்றியுரை வழங்கினார்.*

*மேற்கண்ட நிகழ்வில் ஏறத்தாழ 800 மாணவ - மாணவிகள் பங்கேற்றனர்.*